Koviloor Digital Library

உண்மை

விளக்குபவர் யார்?

KARTHIKA
KV00435

ஜி. கிருஷ்ணமூர்த்தி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உண்மை

விளக்குபவர் யார்?

KVC04435.

வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y.M.C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

ஜி. கிருஷ்ணமூர்த்தி.

Koviloor Digital Library

1927ஹூல்
உலாந்தா தேசத்தில் ஓம்மன் நகரில்
தாரக மகா நாட்டில்

ஸ்ரீமான். ஜி. கிருஷ்ணஜி

அவர்கள் செய்த
உபந்நியாசத்தின் மொழிபெயர்ப்பு.

தி. மு. மாணிக்கம் பிள்ளை
அடையார்.

Copy Right.

Second Edition, Revised

3,000 Copies.

January 1928.

Koviloor Digital Library

உண்மை விளக்குபவர் யார்?

இப்போது சிலவருஷங்களாக யானகவே யோசிக்கும் பழக்கத்தைக் கொண்டு ஜகத் குரு வென்கிற விஷயத்தைப் பற்றி யோசிக்கத் துடங்கியபோது என்மனதில் போராட்ட முண்டாயிற்று. எவ்வித போதனைகளும் அவைகள் எவ்வகைப் பிரமாணத்தோடு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஜகத்குரு வென்றால் என்ன, ஜகத்குரு உருவத்திற்குப் பின்னிற்கும் உண்மையென்ன, என்பவைகளை யானகவே தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணினேன். ஆனல் நானகவே யோசிக்கத் துடங்குமுன், அதாவது எனக்கு யோசிக்கும் வல்லமை வருமுன், கிருஷ்ணமூர்த்தியாகிய யான் ஜகத்குருவிற்கு உடலாக அமைந்திருக்கிறேன் என்று பலர் நிச்சயங்கொண்டிருந்ததினல் அப்படித்தான்

Koviloor Digital Library

இருக்கிறதாக நினைத்திருந்தேன். ஆனால் நானே யோசிக்கத் தொடங்கியபோது ஜகத்குரு என்றால் கருத்தென்ன, ஜகத்குருவானவர் ஒரு தேகத்தை சுவீகரித்தல் என்றாலென்ன, உலகில் அவருடைய அவதாரம் என்றால் என்ன, இவைகளின் உட்கருத்தைக்கண்டறிய வேண்டுமென்று பிரியப்பட்டேன். ஆனால் இப்போது வேணுமென்றே தெளிவில்லாத வகையில் சொல்லுகின்றேன். உண்மையை விளக்கிக் காட்டுவது அதிசுலபமாயிருக்கிறதென்றாலும் அப்படிச்சொல்ல எனக்கு உத்தேசமில்லை. ஏனென்பீர்களோ, ஒரு விஷயத்தைத் தெளிவாய்ச் சொன்னவுடன் அதன் பேரிலிருக்கும் அவா உயிரற்றுப் போகின்றது. மேலும் நீங்கள் ஒரு விஷயத்தை ஒருவிதமாய் நிச்சயமாக்கிக் கொண்டீர்களானால், அதற்கு ஒரு அருத்தம் கல்பிக்க எத்தனிக்கின்றீர்கள். அது மற்றவருடைய மனதில் திட்டமான கருத்தை உண்டாக்கும். அப்படி ஏற்பட்டால் அவர்கள் அந்தக்கருத்தால் கட்டுண்டு விடுவார்கள். அதிலிருந்தும் அவர்களை விடுவிக்க வேண்டியதாயிருக்கின்றது.

Koviloor Digital Library

நான் உங்களுக்குச் சொல்லப்போகிறது. பிரமாணமாக வைத்துச் சொல்லுவதல்ல. நீங்கள் அதை தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர அதற்குக் கீழ்படிந்து நடக்கவேண்டியதல்ல. மேலும் இந்த விஷயம் பிரமாணத்தைப் பொறுத்ததே யல்ல; அல்லது கண்மூடி பின்செல்லும் ஒழுக்கமுமல்ல. இது தான் உங்களில்அநேகருக்குத் தெரியாமலிருக்கின்றது. நீங்கள், என்னை ஓர் விதியை ஏற்படுத்தும்படி வேண்டுகிறீர்கள். யான் இன்னார் என்று என்னைச் சொல்லச் சொல்கிறீர்கள். அப்படி சொன்னவுடன், சரி, அப்படியானல் உமக்காகஉழைப்போம் என்று சொல்லுவீர்கள். நான் இப்போது விவரிக்கப்போகின்றது இக்காரணத்தைக் கொண்டல்ல; பின்னை நாம் ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டு சகாயமாய் ஒத்து நடப்பதற்காகச் சொல்லுகிறேன். ஒருக்கால் இந்த ஜன்மத்திலோ அல்லது இனி ஒரு ஜன்மத்திலோ நீங்கள் தெரிந்துகொள்ளக் கூடியதை இப்போதே உங்களுக்குத் தெரியும்படி செய்கின்றேன்.

Koviloor Digital Library

எனது தாயார் ஸ்ரீ கிருஷ்ண பக்தை யானதால் யான் சிறுபையனாக இருந்தபோது இந்துக்கள் படத்தில் புல்லாங்குழலுடனிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்ப்பது எனக்கு வழக்கம். ஆகையால் யான் புல்லாங்குழலுடன் இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய உருவத்தை என்மனதில் என்னால் கூடிய பக்தியுடனும், அன்புடனும், பாடல்களோடும், ஆனந்தத்தோடும்,உண்டாக்கிக்கொண்டேன். இந்திய சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் இது எவ்வளவு அதிசயமானது என்பது உங்களுக்குத் தெரியாது. யான் பெரியவனானதும் பிஷப் லெட்பீட்டரைக் கண்டதும், திவ்ய ஞானசபையாருடன் பரிசயமானதும், குதூமி மகரிஷியைப் பார்க்கத் தொடங்கினேன்.இவ்விடத்தும் சபையாருடைய கருத்தில் உண்மையெனக் கொண்ட உருவத்தையே பார்த்திருந்தேன். ஆதலால் குதூமி மகரிஷியே யான் அடையவேண்டிய வீடு, முத்தியாயிருந்தார். பிறகு யான் இன்னும் பெரியவனானதும் மைத்திரேய பகவானைப் பார்க்கத் தொடங்கினேன். இது இரண்டு வரு

Koviloor Digital Library

ஷங்களுக்குமுன்; அப்போது அவர் எனக்கு தெரிசனம் காட்டிய சொரூபத்தை சதாபார்த்தேன். இவற்றையெல்லாம் உங்களுக்குச் சொல்வது பிரமாணம் உண்டு பண்ணவேண்டும் என்றல்ல; அல்லது உங்களுக்கு நம்பிக்கை வரச்செய்ய வேண்டும் என்றல்ல. பின்னை உங்களிடத்திலிருக்கும் நம்பிக்கைகளையும் கோரிக்கைகளையும் விளக்கி உங்கள் மனதையும் இருதயத்தையும்உறுதிப்படுத்துவதற்காக, சொல்லுகிறேன். மற்றவர்களுடைய, பிரமாணத்தாலும், பிறருடைய கட்டாயத்தாலும், பிறருடைய வசீகர வார்த்தையாலும்,எனக்கு திருப்தி கிடைக்காததால் உண்மையைக் கண்டறியவேண்டி ஒரு போராட்டம் என் மனதில் எப்போதுமிருந்துகொண்டிருந்தது. யானகவே கண்டு பிடிக்கவேண்டுமென்றிருந்ததால் அதைக் கண்டுகொள்ள கஷ்டப்படவேண்டியதாயிற்று. இப்பால் கொஞ்சகாலமாக என் கண்முன்னே வந்து புத்த பகவான் இருக்கின்றார். அவரோடே இருப்பது எனக்கு ஆனந்தமாயும் திவ்யமாயும் இருக்கின்றது. காதலன் என்றால் கருத்தென்ன

Koviloor Digital Library

வென்று கேட்கின்றீர்கள். அதற்கு அருத் தம் விவரமாய்ச் சொல்கிறேன், கேளுங்கள். இதை உங்களிஷ்டப்படி பொருள் கொள் ளுங்கள். எனக்கு அதுஎல்லாம்தான், ஸ்ரீ கிருஷ் ணன்தான், சுதூமி மஹரிஷிதான், மைத் திரேய பகவான்தான், புத்தரும் தான். இன் னும் இவ்வுருவங்களுக்கெல்லாம் அப்பாலுள் ளதும்தான். எந்தப் பேர் கொடுத்தால்தா னென்ன, ஜகத்குரு என்கிற ஒரு நாமத்தைக் கொண்டு நீங்கள் போராடுகிறீர்கள். ஜகத் குருவைப்பற்றி உலகினருக்குத் தெரியாது. நம்மில் சிலருக்குத் தனிப்படத் தெரியும்; சிலரோ மற்றவர்கள் பிரமாணத்தால் நம்பி யிருக்கின்றனர். இன்னும் சிலர் சொந்த அனு பவத்தாலும், விவேகத்தாலும் அறிந்திருக் கிறார்கள்; என்றாலும் இது அவரவரைப் பொறுத்ததே தவிர உலகினர் கவலைப்படும் விஷயமல்ல. உங்களுடைய ஊக்கமெல்லாம் கிருஷ்ணமூர்த்தி என்கிறவருடைய தேகத் தில் தோன்றிய ஜகத்குரு என்பவர் ஒருவர் இருக்கின்றாரா என்பதைப்பற்றியே இருக் கின்றது. ஆனால் உலகத்தில் இந்தக் கேள்

Koviloor Digital Library

வியைப்பற்றி எவரும் கவலைப்படமாட்டார்கள். ஆகையால் நான் என் காதலன் என்று பேசும்போது என்னுடைய கருத்து யாது என்பது உங்களுக்குத் தெரியும். இதைப் பற்றி விவரிக்க நேர்ந்தது பரிதாபமே: என்றாலும் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. எனக்கு அதைக் கூடியவரையில் தெளிவில்லாதவகையில் சொல்லப் பிரியம்; அப்படித் தான்சொல்லிவிட்டேனென்றுநினைக்கிறேன். எனது காதலன் இவ்விரிந்த வானம்தான், புஷ்பமும் தான், ஒவ்வொரு மனிதனும் தான்.

எல்லா ஆசாரியர்களுடன் யான் ஒன்றும் வரையில் அவர்க ளெல்லோரும் ஒரே தரத்தவர்கள்தானு என்பது முக்கியமில்லை யென்றும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும், கிருஸ்து பகவானும், மைத்திரேய பகவானும் இம்மூவரும் ஒருவர்தானு என்பதும் முக்கியமில்லை என்றும்,யானுகவே சொல்லிக்கொண்டேன். இன்னும் அப்பெரியார்களை படங்களில் பார்ப்பதுபோல முன்னிலைப் பொருளாகப் பார்க்கும் வரையில் யான் வேருகவே

Koviloor Digital Library

இருக்கின்றேன்; 'தான்' என்னும் நடுவிற்குத் தூரமாயிருக்கின்றேன். ஆனல் எனக்குத் திறமைவரும், எனக்கு மன உறுதியேற்படும்; யான்தூய்மை பெறுவேன். தன்னியனுவேன், அப்போது அத்தடை, அப்பிரிவினை எடுபட்டுப்போகுமென்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். அந்தப்படி அத்தடைகள் உடைந்துபோகும் வரையில், அப்பிரிவினை நீங்கும் வரையில், எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. மேலும் மற்றவர்களுக்கு தெரியச்செய்வதற்காக அனுவசியமாய் வியப்பை உண்டாக்காமலும், பெருக்கிக் காட்டாமலும், நிச்சயத்துடன் சொல்ல உறுதி வரும் வரையில், அதாவது நான் என் காதலனேடு ஒருமைப்படும் வரையில், இதைப்பற்றி வாய் திறந்து சொன்னதே கிடையாது. பொதுவாய் எல்லோரும் பிரியப்பட்ட தெளிவில்லாத விஷயங்களைப் பற்றிப் பேசிவந்தேன். நான் லோக குருவென்று முந்தி சொன்னது கிடையாது. ஆனல் இப்போது காதலனேடு ஒன்றுபட்டிருப்பதால் சொல்லுகிறேன். அப்படிச் சொல்வது என்னை ஒரு பிரமாணமாக

Koviloor Digital Library

உங்களுக்குக் காட்டவேண்டு மென்றல்ல;என்னுடைய பெருமையையாவது, ஜகத்குருவின் மகிமையை யாவது, வாழ்க்கையின் அலங்காரத்தையாவது, தெளிவை யாவது,உங்களுக்கு நன்குணர்த்த வேண்டு மென்றல்ல; மற்று உண்மையைத் தேடவேண்டு மென்று உங்கள் மனதிலும் ஹிருதயத்திலு மிருக்கும் ஆவலை சும்மா தூண்டிவிடவே தான் சொல்லுகிறேன். யான் சொல்லுவேனுனல் காதலனேடு யான் ஒன்ருனேன் என்று சொல்லுவேன். அது என் என்ருல் அந்த உணர்ச்சி எனக்கிருக்கிறது;அது எனக்குத் தெரிகிறது. எதன்பேரில் ஆவல் கொண்டிருந்தேனே அதை யான் கண்டுகொண்டேன். அதில் ஒன்ருக கலந்துவிட்டேன்; ஆனபடியால் இனிப்பிரிவினை கிடையாது. என்னில் எனது என்கிற எண்ணங்கள், எனது என்கிற ஆசைகள், எனது என்கிற ஏக்கங்கள், தனியாக இருக்கவேண்டும் என்கிற தன்மைகள் எல்லாம் அழிந்துவிட்டன. ஆகையால் காதலன் என்று சொல்லுபவரை நீங்கள் புத்தர் என்று வைத்துக்கொண்டாலும் சரி, மைத்திரேயு பக

Koviloor Digital Library

வான் என்று நினைத்தாலும் சரி, ஸ்ரீ கிருஷ்ணன் என்று எண்ணினாலும் சரி அல்லது, வேறெந்த பெயர் வைத்துக்கொண்டாலுஞ் சரி, அவரோடு நான் ஒன்றாய்விட்டேன் என்று யான் சொல்லக்கூடும்.

பதினாறு வருஷங்களாக வாய் திறந்து பேசாத ஒரு படத்தை நீங்கள் பூஜித்துவந்தீர்கள். அதற்கு உங்களிஷ்டப்படி வியாக்கியானம் செய்தீர்கள், அதினால் உற்சாகம் பெற்றீர்கள், அது உங்களுக்கு சமாதானத்தை அளித்தது, மனம் சோர்ந்திருக்கும் சமயங்களில் தைரியம் கொடுத்தது. அப்படம் பேசாதிருந்தபடியாலும், அது உயிரில்லாதிருந்ததாலும், உயிருடனிருக்க வேண்டிய அம்சங்கள் அதனிடத்திலில்லாததாலும் நீங்களதைப் போற்றிப் பூஜிக்கக் கூடுமாயிருந்தது. ஆனாலிப்போதோ நீங்கள் பூஜித்துவந்த அந்தப் படம், நீங்களாகவே உண்டாக்கிக்கொண்ட அந்தப் படம், உங்களுக்கு உற்சாகத்தை அளித்த அந்தப்படம், உயிர்பெற்றுப்பேசுகின்றது. நீங்களோ "நான் பூஜித்து வந்த படம் சரிதானா, அதற்குப் பேசமுடியுமா, அதற்கு

Koviloor Digital Library

ஏதாவது பிரமாண முண்டா, ஜகத்குருவைப் பிரதிபிம்பிக்க அதற்கு ஏதாவது வல்லமை யுளதா, அவருடைய ஞான வன்மையையும் கருணையின் பெருமையையும் காட்ட சாமர்த்தியம் இதற்கு முற்றும் இருக்கின்றதா, அது ஒருவரிடத்திலே தான் தோன்றக் கூடுமா வென்று சொல்லுகிறீர்கள். இவைகள் நீங்களாகவே தீர்த்துக் கொள்ள வேண்டிய கேள்விகளாகத்தான் இருக்கின்றன. Dostoievsky (டொஸ்டையிவஸ்கி) என்பவர் எழுதிய பிரசித்திபெற்ற கதையில் கிருஸ்து பகவான் திரும்பத் தோன்றியதாக சொல்லப்பட்டிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கின்றதா? இவர் பிரசங்கம் செய்து கொண்டுகடைசியாய் ரோமாபுரிக்குப் போனாராம். போப்பானவர் அவரை வரவழைத்து இரகசியமாய் முழங்காலிட்டு பூஜித்து, போற்றிய பின்பு, அவரைச் சிறையிலடைத்து "உங்களை நாங்கள் இரகசியத்தில் பூஜிக்கின்றோம். தாங்கள் கிருஸ்து தான் என்று ஒத்துக்கொள்கிறோம். ஆனால் தாங்கள் வெளியே போவீர்களானால் தாங்கள் சங்

Koviloor Digital Library

கடம் மெத்த உண்டாக்குவீர்கள். நாங்கள் எல்லோரும் சந்தேகங்களைத் தீர்க்க எத்தனித்துகொண்டிருக்க, தாங்கள் அவைகளைக் கிளப்பிவிடுவீர்கள்" என்று போப்பானவர் சொன்னாராம்.

இப்போது படத்திலிருந்த உருவம் உயிராகி வரத் தடங்கிவிட்டது. உயிரற்றதிலிருந்து நித்தியமானது எதுவும், சத்தியமானது எதுவும் உங்களுக்கு கிடைக்கமாட்டாது. பனி உறைந்த காலத்தில் நீங்கள் ஓர் மரத்தை பூஜித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் வசந்த காலத்தில் மொட்டுகளாலும் தேனீக்களாலும் பட்சிகளாலும் நிறைந்து உலகமே உற்சாகமாய் வாழும்போது அது இன்னும் இரமணியமாய் இருக்குமல்லவா? குளிர்கொண்டிருந்த இத்தனை வருஷங்களாக நீங்கள் சும்மா விருந்தீர்கள். சுத்தமாய் கபடமில்லாமல் விசாரிக்காதிருந்தீர்கள். அக்காலம் உங்களுக்கு மெத்த சுகமாயிருந்தது; ஆனாலிப்போதோ இதற்கெல்லாம் அருத்தம் என்ன என்பதைநீங்களாகவே தீர்க்கவேண்டிவந்திருக்கிறது. ஜகத்குரு ஒருவரை எதிர்

Koviloor Digital Library

பார்க்கின்றோம் என்று சொல்ல உங்களுக்கு முந்தி சுலபமாயிருந்தது. அதினால் கருத்தில் கொள்ளவேண்டிய அக்கறை கிஞ்சித்தாயிருந்தது; இப்போது அப்படத்திலிருக்கும் உருவம் உயிர் பெற்றிருக்கும் விஷயம் தெளிவாக்கவேண்டி உங்கள் கண்முன் எதிரே நிற்கின்றது. வெறுமையில் படத்தை சதா பூஜித்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா, அல்லது அப்படத்தின் உண்மையைப் பூஜிக்கப் போகிறீர்களா என்று நிர்ணயிப்பது தடையில்லாது அவரவரைப் பொறுத்தது. ஆனால் அப்படம் உயிர் பெற்றிருப்பதைப்பற்றி எனது பிரமாணத்தைக் கொண்டு, நான் எப்படி உங்களை நம்பும்படி பலவந்தம் செய்யவில்லையோ, அவ்விதமே தயவுசெய்து மற்றவர்களை உங்களுடைய பிரமாணத்தைக் கொண்டு பலவந்தம் செய்யாதீர்கள். எனக்கு அது உயிர்பெற்று இருக்கின்றது. அப்படத்தை யான் பூஜித்துக்கொண்டு வந்திருந்தபோதிலும், வெறுமையாய் பூஜித்த மாத்ரமே எனக்கு திருப்தி கிடைக்கவில்லை. அவ்வுருவத்தின் நிலைக்குள் புகுந்து அதன் கண்

Koviloor Digital Library

களின் வழியாய்ப் பார்த்து அதன் மனதால் சிந்தித்து அதன் ஹிருதயத்தால் உணர்ந்து உண்மையைக் காணவேண்டுமென்று எனக் கிருந்தது. ஏனெனில் எனக்கு திருப்தி இல் லாதிருந்தது. அப்படி எனக்கு மனக்குறை யிருந்ததாலும், யான் திருப்தியடையாதிருந்த தாலும், எனக்கிருந்த வருத்தத்தாலும், யான் அப்படத்தை யானாகவே பாவிக்க முடிந்தது. ஆனதுபற்றி அந்தப்படம் யான் தான். இதைப்பற்றி சிக்கலானதொன்றுமில்லை. மாய வித்தை யொன்றுமில்லை. மற்றவர்களை நம் பும்படி செய்விக்க அவசரப்படவேண்டிய தொன்றுமில்லை. நீங்கள் ஏதோ சில பிர மாணத்தின்படி நடந்துகொள்ள ஒத்துக்கொள் ளுகிறீர்களோ அப்போது நீங்கள் சிதைந்து போவீர்கள்; அப்படி போவது முறையே. ஏனெனில் பிரமாணமென்றால் நாளுக்கு நாள் மாறுவதன்றோ! ஒரு நாளைக்கு ஒருவரும் மற்றொரு நாளைக்கு இன்னொருவருமாக ஒரு வரையோபலரையோ பிரமாணமாகக்கொண்டு கீழ்ப்படிந்து நடப்பவன், ஐயோ! கெடுவான். இப்பேர்ப்பட்ட தன்மைதான் நம்மிடத்தி

Koviloor Digital Library

லிருக்கக்கூடாது. அந்தோ இதைத்தான் நீங்கள் எல்லோரும் வேண்டுமென்கிறீர்கள். பரிபக்குவம் முற்றுமடைவதற்கு வேண்டிய தைரியத்தை கொடுக்கும்படியான ஒரு பிரமாணத்தை கேட்கின்றீர்கள். ஆனால் பரிபக்குவமாவதற்குரிய தைரியம் பிரமாணத்தால் வாமுடியாது. வெளிப் பிரமாணம் யாதும் விருத்திக்குக் கொண்டுவரும் திறமையைக் கொடுக்காது; படத்தின் உருவம் உயிர்பெற்றபிறகு, அதுசொல்லும் உண்மை முக்கியமானதா, இல்லையா, என்பதை நீங்களாகத் தான் சோதித்துக்கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவருக்கும் காது கொடுத்துக் கேட்பது எனக்கு எப்போதும் அப்பியாசமாகயிருந்தது. காதலனோடு ஒன்றாகும்பொருட்டு தோட்டக்காரனிட மிருந்தும், பறையனிட மிருந்தும், தீண்டாதவனிடமிருந்தும், என் அண்டை வீட்டுக்காரனிடமிருந்தும், என் சிநேகிதனிடமிருந்தும், அறிவு புகட்டக் கூடிய ஒவ்வொன்றிடமிருந்தும், நான் கற்கப்பிரியப்பட்டேன். நான்செவிசாய்த்து எல்லோரிடமிருந்துங் கேட்டு எங்கெங்கு உண்

Koviloor Digital Library

மையகப்பட்டதோ அதைச் சேர்த்தபோது நான் என்னை முழுப்பரிபக்குவ விருத்திக்குக் கொண்டு வரக்கூடுமாயிற்று. இப்போதோ நீங்கள் உண்மை ஒருவரிடமிருந்தே வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்; பிரமாணத்தைக் கொண்டு உண்மையை உங்களுக்குப் பலவந்தத்தால் புகட்டும்படியும், விருத்தியாக்கும் படியும் காத்திருக்கின்றீர்கள். உண்மையை விட்டு என்னை பூஜிக்கின்றீர்கள். கிருஷ்ணமூர்த்தி காலம்சென்ற பிறகு (இது தவருமல் நிகழும்) கிருஷ்ண மூர்த்தி என்பவர் உங்களுக்கு உண்மையாக விளங்கினுர் என்று, அவருக்காக சமயம் ஒன்றை ஏற்படுத்துவீர்கள், அதற்கோர் விதிகளை ஏற்படுத்த மனதிற்கொள்வீர்கள், அப்படியே கோவிலொன்றைக் கட்டுவீர்கள், பிறகு சமயசடங்குகளை ஏற்படுத்தவும் பரிபாஷைகள் சித்தாந்தங்கள் சொள்கை கோட்பாடு முறைகளை உண்டாக்கவும் ஆரம்பிப்பீர்கள், பாஷ்யங்களைச் செய்வீர்கள். தனியனும் என்னை ஆதாரமாகக்கொண்டு பெரியதோர் அஸ்திபாரம் போட்டீர்களானுல் நீங்கள் அந்த கட்டடத்

Koviloor Digital Library

தில் அந்தக்கோயிலில் அகப்பட்டுக்கொள்வீர்கள். ஆகையால் அந்தக் கோவிலிலிருந்து உங்களை வெளியேற்றவும் அச்சிறுமையினின்று விடுவித்து வெளிக்கு இழுக்கும் பொருட்டும் இன்னொரு ஆசிரியர் உங்களுக்கு வேண்டியதாயிருக்கும். ஆனால் வழக்கப்படி பின்னும் ஒரு கோவில் அப்பெரியாருக்காகவும் கட்டிவிடுவீர்கள். இப்படித்தான் இது போய்க்கொண்டிருக்கும். ஆனால் தெரிந்துகொள்பவர்கள், பிரமாணத்தை நம்பிக்கொண்டிருக்காதவர்கள், ஜனங்களை எல்லாம் தங்கள் ஹிருதயத்தில் வைத்திருப்பவர்கள், கோவில்களை கட்டமாட்டார்கள். இவர்கள் உண்மையில் தெரிந்துகொள்வார்கள். பிறருக்கு உதவி புரிய வேண்டுமென்று உண்மையில் சிலர் விருப்பம் கொண்டபடியால் இவர்கள் எளிதில் கண்டு கொண்டார்கள். தெரிந்துகொள்ளாதவர்களோ இதைப்பற்றியும், போதனைகளை எவ்விதம் புகட்டவேண்டு மென்பதைப் பற்றியும், மெத்த பேசிக்கொண்டிருந்தபோதிலும் சத்தியத்தைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு மெத்த கஷ்டமாயிருக்கும். உல

Koviloor Digital Library

கத்தாருக்கு போய் போதிப்பது எனக்கு மெத்த சுலபமாக இருக்கின்றது. உலகினரோ ஜகத்குருவின். அவதாரத்தைப் பற்றியும், ஆவேசத்தைப் பற்றியும், அல்லது அநேகவருஷங்களாக சரிப்படுத்திக்கொண்டு வந்திருந்த தேகத்தில் புகுவதைப் பற்றியும், அல்லது கிருஷ்ணமூர்த்தியைப் பற்றியும், விசாரப்படுபவர்களல்லர். அவர்கள் சொல்லப்போவது யாதெனில் "நான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன், எனக்கு அற்ப சுகங்களும் மாறி மாறிவரும் துக்கங்களும் உண்டு; நீடித்துள்ளது எதாவது கொடுக்க உங்களிடத்தில் உண்டா, நீங்கள் பேரின்பத்தையும் முக்தியையும் அடைந்ததாகச் சொல்கிறீர்களே, உங்கள் இன்ப ராஜ்ஜியத்தில் உங்கள் முக்தியுலகில் நாங்களும் புகும் வண்ணம் அதை எங்களுக்கு கொடுக்க முடியுமா?" என்பார்கள். இது தான் அவர்கள் கவலைப்படுவது; மற்றபடி பட்டங்களைப்பற்றியாவது, சங்கங்களைப் பற்றியாவது, விதிகளைப் பற்றியாவது, சாஸ்திரங்களைப் பற்றியாவது, விசாரப்படுபவர்கள் அல்லர். மானிடர்களென்று சொல்லும் பாலத்தின் கீழ்ஓடும்

Koviloor Digital Library

ஜீவஜலத்தைக் கண்டுபிடித்து அந்த நீரோட்டத்தோடே நீந்தி விரிந்த சாகரத்தில்போகப் பிரியப்படுகிறார்கள். நீங்களோ எல்லா வேளையிலும் இதை எவ்விதம் வியாக்கியானம் செய்வது என்று விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் உங்களுக்குள்ளே நீங்கள் உண்மையை கண்டு பிடிக்கவில்லை. நீங்கள்சிறுமையால்கட்டுண்டிருக்கின்றீர்கள்; என்றாலும் நீங்கள் மற்றவர்களை விடுவிக்க பிரயத்தினப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இது உங்களால் முடியுமா? உண்மையை பளிச்சென்று விளக்கிக் காட்ட உங்கள் மனக்குட்டையில் படிந்திருக்கும் அழுக்கைநீக்கித்தெளிவாக்கினாலொழிய பொய்யெது, மெய்யெது, ஜகத்துரு என்பதுயாது, நித்தியமானது எது, என்பதை எப்படி கண்டு பிடிக்க முடியும்?

இப்பிறப்பில் எப்பொழுதும் (ஒருக்கால் கடந்த ஜன்மங்களிலும்) நான் ஒன்றையே நாடியிருந்தேன். அதாவது பவச்சுழலிலிருந்து தப்பிபோக, துக்கவரம்பைத் தாண்டிப்போக, பந்தத்திலிருந்து விடுபட்டு அப்புறம் போக, ஏன அதுருவை என அதகாதலனைக்கண்டுபிடிக்க

Koviloor Digital Library

ஏக்கமிருந்தது. இந்தக் காதலன்தான் உங்களது குரு, உங்களது காதலன், ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு சாதாரணக் கல்லிலும் நாம் மிதிக்கும் ஒவ்வொரு புல்லறுகிலும் இருக்கும் குரு, காதலன் அவர்தான். நான் வேறு என்று உணராவிதமாயும், யானுகி தனித்து இருப்பவன் ஒருவன் என்று இனி இருக்கா வண்ணம், அவருடன் சேர்ந்திருக்க எனக்கு வாஞ்சையிருந்தது, ஏக்கமிருந்தது. நான் வேறு என்கிற அந்தப் பிரிவினையைச் சுத்தமாயில்லாதபடி ஒழித்தபோது என்னுடைய காதலனோடு நான் கலக்க முடிந்தது. எனது உண்மையை, எனது காதலனைக் கண்டு பிடித்தபடியால்தான் அதை உங்களுக்கு அளிக்கப் பிரியப்படுகிறேன்.

காலைப்பொழுதில் காற்றுக்கு மணத்தை ஊட்டும் புஷ்பத்தைப்போல் நானிருக்கின்றேன். புஷ்பமோ அதனருகில் செல்பவர் எவர்என்பதைப்பற்றி அக்கரைப் படுவதில்லை. அது வாசனையை வீசிக் கொண்டே இருக்கும். கண்டு களித்திருப்பவரும், காணேமே யென்ற ஏக்கத்தால் துன்புற்றிருப்பவரும் அவ்

Koviloor Digital Library

வாசனையை அறிந்து சுவாசிப்பார்கள். ஆனால் அற்பத்தில் திருப்தியடைந்தவர்கள், ஏக்கமில்லாதவர்கள், அக்கரையில்லாதவர்கள், வாசனை சுகத்தை தெரியாதவர்கள் மதிப்பில்லாமலே பக்கத்தில் போய்க்கொண்டிருப்பார்கள். நீங்கள் அவர்களை நிறுத்தி அந்த மணத்தை நுகரும்படி பலவந்தப்படுத்தப் போகின்றீர்களா? நீங்கள் அவர்களை எப்படி நம்பச்செய்வது என்பதில் கவலையாயிருக்கின்றீர்களே! நீங்கள் ஏன் அவர்களை நம்பச் செய்யவேண்டும்? வாஸ்தவத்தில் யார் தேடிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய சந்தேகத்தை மாத்திரம் தீர்க்கமுடியும். உங்களுக்கு தேடுவதிலேயே சந்தேகமிருப்பதால் நீங்களே வாஸ்தவத்தில் தேடுபவர்களல்ல. உங்களுடைய சிற்றறிவிலும் அற்ப பிரமாணங்களினும் நீங்கள் திருப்தியடைந்திருக்கின்றீர்கள். உங்கள் சந்தேகங்களிலிருந்து உங்களை காப்பாற்றிக்கொள்ள நீங்கள் அந்த பிரமாணங்களோடு பேசச் சொல்கிறீர்கள். யாரோ ஒருவன் தாந்தான் லோக குருவென்று உங்களுக்கு பிரமாணமாகச் சொல்ல வந்த

Koviloor Digital Library

தாக வைத்துக்கொள்வோம். அது எவ்வகையில் உதவி தரக்கூடும், எவ்விதத்தில் உண்மையை மாற்றக்கூடும், எவ்வகையில் அது உங்கள் மனதிற்கு அறிவை யூட்டும் உங்கள் ஹிருதயத்தில் தெளிவை உண்டாக்கக்கூடும். நீங்கள் இப்படிபிரமாணத்தை பற்றியிருப்பீர்களானல் மணலில்லவோ அஸ்திபாரம் போடுகிறீர்கள். துக்கம் என்னும் அலை வந்தபோது இதை அடித்துக்கொண்டு போய் விடுமே. உங்கள் கடைக்காலை பாறையின் பேரில், அதாவது உங்களறிவு உங்களுடைய துக்கங்கள், உங்களுடைய வருத்தங்கள் இவைகளின் அனுபவமென்கிற கல்லின்மீதூன்றி அஸ்திபாரம் போட்டு உங்கள் வீட்டை ஒவ்வொரு கல்லாய் அதாவது அனுபவத்தின்மீது அனுபவத்தை வைத்துக்கட்டுவீர்களானல்அப்போது நீங்கள் மற்றவர்களுக்குத் தெளிவாகச் சொல்லமுடியும். இதுவரையில் பிரமாணத்திற்காக தாரகசங்கத்தின் போஷகர்கள் இருவரை நம்பிக்கொண்டும், உங்களுக்கு உண்மையை சொல்லும்படி மற்றவர்களை எதிர்பார்த்துக்கொண்டும் இருந்தீர்கள். வாஸ்தவத்தில்

Koviloor Digital Library

உண்மை உங்களிடத்தில்தானிருக்கிறது.உங்களுடைய ஹிருதயத்திலும் உங்களுடைய சொந்த அனுபவத்திலும் உண்மையை நீங்களே காணலாம். அப்படிப்பார்ப்பதுதான் ஸ்திரமானது, அப்போதுதான் அது உங்களுடைய குறையைத்தீர்க்கும். உங்களுடைய துக்கங்களைப் போக்கும். ஆகையால்தான் இவ் விஷயங்களைப்பற்றி உங்களுக்கு சொல்ல வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. நான்தான் ஜகத்குருவென்று இப்போது சொல்வதுபோல் சென்றவருஷம் சொல்ல என்னுல் முடியவில்லை. சொல்லியிருப்பேனுல் அது நேர்மையில்லாததாயிருக்கும், உண்மையற்றதாயிருக்கும். அப்போது மூலகாரணமாயும், அடையும் வீடாயும் உள்ளதோடு கலவாததினுல் நான் ஆசாரியனேன்று சொல்ல முடியவில்லை. ஆனுல் இப்போது சொல்ல முடியும். காதலனேடு ஒன்றுனேன்; என்னைத் தெளிவாக்கிவிட்டது, அவருடைய கிருபையால் யான் வைபவம் பெற்றேன். அவருடைய அருளால் யான் உதவிசெய்யக் கூடும். கிருஷ்ணமூர்த்தியின் தேகத்தில்

Koviloor Digital Library

தோற்றமுண்டா யிருக்கிறது என்பதைப் பற்றி பிரமாணங்களைக்கொண்டு வாக்குவாதங்களை உண்டாக்குவது எனது நோக்கமல்ல. மற்று உங்கள் சிறுமைகள், சிற்சிறு கொடுமைகள், உங்கள் கால்கட்டுகள், இவைகளைச் சுத்தமாய் கழுவவேண்டிய தீர்த்தத்தைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் எனது கருத்து. அப்படிக்கொடுப்பதால் நீங்கள் கடைத்தேறுவீர்கள்;முடிவினில் நீங்கள் கரையற்ற கடல்போலிருக்கும் காதலனோடு சேர்வீர்கள்.

உங்களைத் தெளிவாக்கி விட்டேனென்று நினைக்கிறேன். தெரிந்துகொள்ளக் கூடியவர்களுக்கு தெளிவாகத்தானிருக்க வேண்டும். மனதாலும் ஹிருதயத்தாலும் தடவிக்கொண்டும் தேடிக்கொண்டும் உண்மையைக் காண ஏக்கம்கொண்டிருந்தவர்கள் கண்டுகொள்வார்கள்.வாழ்க்கையின் நடையை திருத்திக்கொள்ளப் பிரியமில்லாதவர்களுக்குச் சொல்லி, தெளிவாக்கவாவது அவர்களை திருத்தவாவது முடியாது. ஆனால் நான் திருத்திக்கொண்டு காதலனோடு ஒன்றாய்விட்டதாலும், என்னிடம் நேசிக்கும் தன்மையிருப்பதால் எல்லோ

Koviloor Digital Library

ரும் அடையவேண்டிய முடிவை, வீட்டை, சேர்ந்து விட்டதாலும்,— நேசமில்லாவிடில் வீட்டையடைவது துர்லபம்,— நான் அன்பு பாராட்டி கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் பார்த்து கண்டுகொண்டதாலும், இதை யடையாதவர்களுக்கு கொடுத்தல் சுபாவமாக, எனது கடமையாக, எனது பிரியமாக, எனது தர்மமாக ஆகிவிட்டது. இதைத் தாரக சங்கத்தின் மூலமாய் அல்லது வேறு சபைமூலமாய் கொடுக்கிறேன் என்பது முக்கியமானதல்ல. எந்த சங்கத்தின் மூலமாய் கொடுக்கப்பட்டது, என்பதைப்பற்றி ஜனங்கள் விசாரப்படுபவர்கள் அல்லர். அவர்களுடைய சுகங்கள் நிலையற்றபெருமைகள் நீர்க்குமிழிபோன்ற ஆசைகள் இவைகளை அறவே ஒழித்து இவைகளுக்கு அப்பாலுள்ள வாழ்வை நிலைநிறுத்தினல் மாத்திரம் அவர்களுக்கு திருப்தியுண்டாகும்.

இந்த விமோசனத்தின் உண்மையை இந்த பேரின்பத்தின் உட்பொருளைத் தெரிந்து கொள்வீர்களாகில் உங்களிடமிருக்கும் வீண் பெருமைகளினின்றும் சுகதுக்கங்களினின்

Koviloor Digital Library

றும் நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்வீர்கள். நான் விடுபட்டிருக்கின்றபடியால் உங்களை விடுவிக்கப் பிரியப்படுகிறேன். ஆனால் நீங்களோ அதை சித்தாந்தமான ஏதோ ஒரு வகையில் சொல்லச் சொல்கிறீர்கள். தண்ணீரை எந்தப் பாத்திரத்திலிருந்து குடித்தாலென்ன, தாகத்தைத் தீர்த்தால் போதாதா ? உணவை உங்களுக்கு யார் கொடுத்தால்தானென்ன, பசியைத் தீர்த்து பலம் கொடுத்தால் போதாதா ? நீங்களெல்லோரும் நூற்றாண்டுகளாய் பட்டப்பெயர்களில் பழக்கப்பட்டு வந்திருக்கிறீர்கள். ஆகையால் பரமார்த்த ஜீவிதத்திற்கும் ஒரு பட்டம் கட்டும்படி கேட்கின்றீர்கள். கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு பட்டம் கட்டவேணுமென்கிறீர்கள். அதுவும் குறிப்பிட்டபடி கொடுத்துவிட்டால் 'எனக்கு இப்போது தெரிந்துவிட்டது' என்று சொல்வீர்கள். அப்போது உங்களுக்கு சாந்தம் உண்டாகும். அந்தப்படியாகுமென்று நான் நினைக்கவில்லை. கடலிலுள்ள நீருக்கு அணைகட்ட முடியுமா ? ஜனங்கள் பிரயத்தினப்பட்டார்கள்; ஆனால் எப்

Koviloor Digital Library

போதும் சேடுவந்து நேரும். என்னைப் பந்தப்படுத்திக்கொள்ள விடமாட்டேன். அப்படி செய்தால் தடையேற்படுத்துவது என்று அருத்தம். உங்களால் காற்றை கட்டமுடியாது. அதில் கொஞ்சம் பிடிக்கலாம், அசுத்தப்படுத்தலாம், அதில் விஷத்தைக் கலக்கலாம், ஆனால் வெளியில் இருக்கும் காற்றோ எல்லாருக்காக ஏற்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் அடக்கிப்பிடிக்க ஒருக்காலும் முடியாது. எவராலும் கட்டுண்டு இருக்க என்னை விடமாட்டேன். நான் என் வழியே போவேன். அது ஒன்றுதான் வழி; கோரினதைக் கண்டுகொண்டேன். என் காதலனோடு ஒன்றாய் விட்டேன். என் காதலனும் யானும் இத்தரணிமீது சேர்ந்து உலாவி வருவோம்.

எவ்வித பிரமாணத்தாலும், எவ்விதப் பயத்தாலும், எவ்வித சாப மிரட்டலும் ஜனங்களை பலவந்தம் செய்ய உங்களால் ஒருபோதும் முடியாது. அக்காலம் எல்லாம்போய்விட்டது. இக்காலமோ குழப்பமும் கூச்சலும் உள்ளது; தானாகவே ஒவ்வொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்ப

Koviloor Digital Library

மிருக்கின்றகாலம். அப்பேர்ப்பட்ட விருப்பம் உங்களிடத்திலில்லாததினுல்தான் பந்தப்பட்டிருக்கும் உலகிலிருக்கின்றீர்கள். தெரிந்துகொண்டதாக நினைக்கின்றீர்களேயன்றி உண்மையில்காணவில்லை. உங்களுடையசிற்சிறு சந்தேகங்களை நிச்சயமென்று கொண்டிருப்பதால் உலகைத் திருப்பிவிடலாமென்று நினைக்கின்றீர்கள்.

ஈப்பில் கோபுரம் கட்டி முடிந்ததும் அதின் மேல் ஆகாய விமானமொன்று பறக்கிறவரையில், அதுதான் உலகத்தில் அதிக அழகானதாயும் அதிக அதிசயமானதாயும் மெத்த உயர்ந்த தாயும், நினைத்துக்கொண் டிருந்ததாம் ; நீங்களெல்லோரும் மானேடு ஓடவும் சிங்கத்தோடுகர்ஜிக்கவும் முடியுமென்றுநினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனல் நீங்கள் காதலனேடு ஒன்ருகிவிடும்போது தான் மானேடு ஓடமுடியும் சிம்மத்தோடு கர்ஜிக்கமுடியும் நீங்கள் காதலன் யார் என்று என்னைக் கேட்பதில் பிரயோஜனமில்லை ; விளக்கினுலும் என்ன உபயோகம்? நீங்கள் அவரைஒவ்வொரு மிருகத்திலும் ஒவ்வொரு புல்லரும்பிலும், துக்

Koviloor Digital Library

கப்படும் ஒவ்வொருவனிடத்திலும் மானிடன் ஒவ்வொருவனிடத்திலும் அவரைப் பார்க்கும் வரையில் காதலன் என்பது உங்களுக்கு தெரியமாட்டாது.

ஆகையால், நண்பர்களே, மாந்தர்களுடைய தாகத்தைத் தீர்க்க வல்ல ஜலத்தைக் கொடுப்பது தான் முக்கியமான விஷயம்; இவ்விடம் இருக்கிறவர்களுக்கு மாத்திரமல்ல மற்று உலகத்திலுள்ள எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். எல்லார்க்கும் திருப்தி கொடுத்து ஹிருதயத்தை சுத்தி செய்வது, மனதை கண்ணியமாக்குவது எதுவெனில்: உண்மையைக்கண்டுபிடிப்பது, அவர்களுடைய மனதிலும் ஹிருதயத்திலும் முத்தி பேற்றையும் பேரின்பத்தையும் நிலை நிறுத்துவதுமே.

Printed at the "NOBLE PRESS" MADRAS.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library